மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தமிழகத்திலே வெண்மைப் புரட்சியை உருவாக்குவதற்காக பல திட்டங்களைக் கொடுத்துக் கொண்டு இருக்கிறது. அந்த வகையிலே எங்கெல்லாம் பால் உற்பத்தி அதிகமாக இருக்கின்றதோ, அங்கெல்லாம் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைப்பதற்கு அம்மா அவர்கள் திட்டம் வகுத்துத் தந்திருக்கின்றார்கள். அதன் அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய இடத்தில் பால் வரத்து அதிகமாக இருப்பின், அங்கே பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

12—

கால்நடை மருத்துவமனை

***22063—திரு. நயினார் நாகேந்திரன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, மானூர் ஊராட்சி ஒன்றியம், சேதுராயன்புதூரில் கால்நடை மருத்துவமனை அல்லது கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற திருநெல்வேலி தொகுதி, சேதுராயன்புதூர் கிராமத்திலும், அதைச் சுற்றியுள்ள கிராமத்திலும், கால்நடை விதிகளுக்கு உட்பட்டு, 5 ஆயிரம் கால்நடைகளுக்கும் அதிகமாக உள்ளதால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று அங்கே ஒரு கால்நடை கிளை மருத்துவமனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஜனவரி 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் உணவு அளிக்கும் கடவுளைப் போல, உலகெங்கும் வாழும் தமிழர்களின் ஒப்பற்ற தலைவி, கால்நடைகளுக்கும் கருணை காட்டும் தாய், வள்ளலாரின் வழித் தோன்றல் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11-15

"தன்னையே கொடுப்பதில் வாழைக்கு ஈடு,
சம்சாரி வாழ்வுக்கு ஒரு பசு மாடு,
பொன்னையே தந்தாலும் உனக்கு ஏது ஈடு"

என்று மறைந்த இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடிய பாடல் வரிகளுக்கு இணங்க, பொன்னையும் தந்து, தாலிக்கு தங்கமும் தந்து, ஆடுகளும் தந்து, கறவை மாடுகளும் தந்து, அந்த மாடுகள் கறக்கின்ற பாலுக்கு அதிக விலையும் தந்து, வெண்மைப் புரட்சிக்கு வித்திட்டவர் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்கள். திருநெல்வேலி தொகுதி, இராமையன்பட்டியில் தென் மாவட்ட மாணவர்கள் பயன்பெறும்வகையில் சுமார் 60 கோடி ரூபாயில் கால்நடை மருத்துவக் கல்லூரியும், திருநெல்வேலி தொகுதி, பேட்டையில் ஏற்கெனவே ஒரு கால்நடை மருந்தகமும், இன்றைக்கு நம்முடைய தமிழகத்தின் கால்நடை துறை அமைச்சர் அவர்கள்மூலமாக திருநெல்வேலி தொகுதி, சேதுராயன்புதூரில் கிளை மருந்தகம் அமைத்துத் தருவேன் என்று உறுதியினையும், திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதியின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக 230 கோடி ரூபாயும் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். திருநெல்வேலி தொகுதியில் உள்ள 43 ஊராட்சிகளுக்கும் சுமார் 56 கோடி ரூபாயில் மானூர் கூட்டுக் குடிநீர் தந்தமைக்கும், வளமான இந்தியா, வல்லரசு இந்தியாவை உருவாக்க இருக்கின்ற இன்றைய தமிழகத்தின் முதலமைச்சர், நாளைய பாரதப் பிரதம அமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், திருநெல்வேலி தொகுதி மக்கள் சார்பாகவும் கோடானுகோடி நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். நன்றி, வணக்கம்.